1972 மார்ச் 9]

வகையில் நடத்த முடியும் மாதவரம் பால் பண்ணைக்கு அரசாங்கம் மீண்டும் அதிக பால் உற்பத்திக்காக வழி செய்திருக்கிறது. இதை வேறு ஒரு இடத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திருமணமாகி விட்டது. குடும்பம் தான் நடத்தவில்லை. இனி பழைய மாப்பிள்ளையை மாற்றுவது என்பது இயலாத காரியம்.

திரு. கே. கந்தசாமி : மரியாதைமிக்க துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட கால் நடைப் பண்ணைகளை நடத்த, அவற்றை அபிவிருத்தி செய்ய இது ஒன்று தான் வழி என்று கருதக் கூடாது. கால்நடை வளர்ப்புக்கு பல் வேறு முறைகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் கால் நடை வளர்ப்பில் நல்ல அபிவிருத்தி காட்ட முடியும். கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்களும் கால்நடை வளர்ப்பிற்காக, அதன் தரத்தை உயர்த்துவதற்காக முயற்சி எடுத்துக் கொண்டால், அரசாங்கத்தின் உதவியில்லாமலேயே பெரும் அளவுக்குக் கால்நடை வளர்ப்பு ஏற்படுத்தலாம்.

கும்மிடிப்பூண்டிக்குத் துணைப்பதிவாளர் அலுவலகம்

* 358 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் " சப்-ரிஜிஸ்ட்ரார் " அலுவலகம் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் . தற்போது இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, கும்மிடிப் பூண்டி வட்டாரத்தில் இருக்கும் பொதுமக்களும், விவசாயிகளும் நீண்ட தூரம் சென்று, பொன்னேரி சென்று பதிவுகளைச் செய்ய

வேண்டி உள்ளது. அந்த வட்டாரத்தின் பரப்பளவைக் கருதி யாவது, இந்த ஆண்டிலேயே ஒரு சப்-ரிஜிஸ்திரார் அலுவலகம், கும்மிடிப்பூண்டியில் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும், பொன்னேரிக்கும் இடையே 7 மைல் தொலைவுதான் இருக்கிறது. என்றாலும், துணைப்பதிவு அலுவலகம் அமைக்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய நிதி வசதியில் தனித்து அது இயங்கக்கூடிய நிலையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவற்றைப் பரிசிலனை செய்து உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்யலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும் பொன்னேரிக்கும் இடையே சுருக்கு வழியாகப் போனால் 10 மைல் இருக்கலாம். கும்மிடிப்பூண்டிக்கு வடமேற்கே 15—20 மைல் தூரம் இருக்கிற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பொன்னேரிக்கு வர வேண்டுமானால், 25-30 மைல் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அங்கே ஒரு தனி துணைப்பதிவு அலுவலகம் திறப் பதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்வார் களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : எவ்வளவு தொலைவு இருக்கிறது என்பது மட்டுமல்ல. இந்தப் பிரச்னைக்கு நான் முன்பு கூறியது போல், தனித்து இயங்குகிற அளவுக்கு அத னுடைய நிதி வசதி இருக்க வேண்டும். அந்த முறையில் பரிசீலனை செய்யப்படும்.

தொழிலாளர் வேலை நேரம்

* 359 வினா—**திரு. ஏ. எம். ராஜா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) தொழிலாளர்களின் வேலை நேரங்களை (வாரத்தில்) குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?